20.01.2026

O.S.No. 140/2022

PW1– மாடசாமி– த/பெ. பொன்னுச்சாமி

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 20.01.2026

<u>குறுக்கு விசாரணை :</u> ( பிரதிவாதி தரப்பில்)

1. 1ம் பிரதிவாதி எனது உடன்பிறந்த சகோதரர் என்றால் சரிதான். முதலில் நானும், 1ம் பிரதிவாதியும் சேர்ந்துதான் சென்டிரிங் தொழில் செய்து வந்தோம் என்றால் சரிதான். எனது வீட்டிற்கு மேல்பக்கம் 1ம் பிரதிவாதி வீடு என்றால் சரிதான். எனது வீட்டிற்கும் 1ம் பிரதிவாதி வீட்டிற்கும் வடப்பக்கம் சாலை உள்ளது என்றால் சரிதான். எனது வீட்டில் உள்ள கழிவுநீர், 1ம் பிரதிவாதி வீட்டின் கழிவுநீர் அனைத்தும் வீட்டின் முன்புள்ள வாறுகாலில் சென்றடையும் என்றால் சரிதான்.

2. 1ம்பிரதிவாதி என் மீது, என் வீட்டிலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற அச்சங்குன்றம் ஊராட்சி அலுவலகத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல, நான் தான் புகார்கொடுத்தேன். அச்சங்குன்றம் ஊராட்சியில் இருந்து ஆக்கிரமிப்புகளை அகற்ற எனக்கு அறிவிப்பு வந்தது என்றால் சரிதான். அதற்கு பிறகுதான் நான் இந்தவழக்கு பிரதிவாதிகள் மீதும், அச்சங்குன்றம் ஊராட்சி மீதும் அ.வ.எண்.144/2022 வழக்கு தாக்கல் செய்தேதன் என்றால் சரிதான்.

3. 2ம் பிரதிவாதி அங்கன்வாடியில் வேலைசெய்து வருகிறார் என்றால் சரிதான். எனது மனைவியும் அங்கன்வாடியில் வேலை செய்ய விண்ணப்பித்தார் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதியும், எனது மனைவியும்

ஒரேநேரத்தில்தான் விண்ணப்பித்தார்கள் என்றால் சரிதான். எனது மனைவிக்கு வேலை கிடைக்காததால் எனது மனைவிக்கும், 2ம் பிரதிவாதிக்கும் இடையே மனக்கசப்பு ஏற்பட்டது என்றால் சரியல்ல.

4. பிரதிவாதிகளின் நாய் எனது மகனை கடித்ததற்கு காவல்நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல, புகார்கொடுத்தேன். அதற்கு ரசீது கொடுத்தார்களா என்றால் கொடுக்கவில்லை. மேலும் காவல்நிலையத்தில் நான் புகார் கொடுத்த சமயத்தில் எனது மகனை கடிக்கவில்லை, துரத்த தான் செய்தது, அதற்குபின்பு தான் கடித்தது. பிரதிவாதிகளின் நாய் குட்டி நாய் என்றால் சரியல்ல. மேற்படி நாயை தெருவில் அனைவரும் விளையாடுவார்கள் என்றால் சரியல்ல. மேற்படி நாய் எப்போதும் பிரதிவாதி வீட்டில் கட்டிதான் இருக்கும், எனதுமகன் வெளியில் வரும் போது கடிக்கவிடுவார்கள். நான் பிரதிவாதிகள் மீது காழ்ப்புணர்ச்சி காரணமாக வம்பாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

ஒம்/–K.N.குரு
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி